யாழ்ப்பாணம்
25 MAR 2000
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 12 சனிக்கிழமை (25 - 03 - 2000) VALAMPURI ஒலி: 97

கட்டுநாயக்கா விமான நிலையத்தில்

"சசிகை 202" விமானம் வீட்டின்மீது மோதி தீப்பற்றியது
ஐந்து ரஷ்யசிப்பந்திகளுடன் பச்சிளம் பாலகனும் பலி!

(கொழும்பு)

தாய்லாந்து தலை நகர் பாங்கொக்கிலிருந்து வந்த சரக்கு விமானமொன்று நேற்று மாலை 6.30 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு அரைமைல் தொலைவில் கதிரானப் பகுதியில் விழுந்து நொருங்கியதில் 5ரஷ்ய விமான சிப்பந்திகளும் ஒரு பச்சிளம் பாலகனும் பலியாகியுள்ளனர். கர்ப்பிணிப் பெண் உட்பட ஆறுபேர் படுகாயங்களுக்குள்ளானார்கள்.

படுகாயமடைந்தவர்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்த சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

'எக்ஸ் கைகெற்' நிறுவனத்திற்குச் சொந்தமான ''சசிகை 202'' என்ற விமானமே விபத்துக்குள்ளானதாகும்.

இலங்கைக் கம்பனி ஒன்றுக்கு வாடகைக்கு அமர்த்திய இந்த விமானம் ஆடைகளை ஏற்றி இறக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

காலநிலை சீர்கேடு காரணமாக வீடுகளின் மேல் உராசிச்சென்று, ஒரு வீட்டுடன் மோதியதினால் விமானம் தீப்பற்றி எரிந்தது.

இந்த விமானத்தில் 7 ரஷ்ய சிப்பந்திகளும் ஒரு இலங்கையரும் பயணம் செய்திருந்தனர். தீப்பற்றிய விமானத்தின் தீயை தீயணைக்கும் படையினர் சுமார் ஒரு மணித்தியாலத்தில் தீயை அணைத்தனர்.

விமானம் வீடுகளின் (8ஆம் பக்கம் பார்க்க)

★ நோர்வே சமாதான முயற்சிக்கு ஆதரவு தெரிவித்தும்
★ யுத்தத்தைநிறுத்தி ★ சமாதானத்தைவலியுறுத்தியும்

இன்று குடாநாடுதழுவிய
மாபெரும் சமாதானப்பேரணி

இனப் பிரச்சனை தொடர்பாக நோர்வே அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தும் 3ஆம்தரப்பு மத்தியஸ்தம் யுத்தநிறுத்தம் ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தியும் மாபெரும் சமாதானப் பேரணி ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

இப்பேரணியில் நாற்பதுக்கு மேற்பட்ட வெகுஜன அமைப்புக்களில் இருந்தும் பொதுமக்களுமாக பல்லாயிரக்கணக்கில் கலந்து கொள்கிறார்கள்.

இன்று காலை 9 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் இச்சமாதானப் பேரணி ஆரம்பமாகிறது. இப் பேரணியில் 17 ஆண்டுகாலப் போர் முடிவுக்குவர வேண்டும் என்றும், யுத்தம் உடன் நிறுத்தப்பட்டு நீதியானதும், நியாயமானதுமான ஒருதீர்வு எட்டப்படவேண்டும் என்றும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சு 3ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடன் உடன் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் சமாதானத்துக்காக விடுக்கப்படும் சமிக்ஞைகளை (8 ஆம் பக்கம் பார்க்க)

போதிலியனகே புதிய பிரதி பொலிஸ் மாஅதிபர்

(கொழும்பு)

கொழும்பு பிரதிப் பொலிஸ் மாஅதிபராக போதிலியனகே நேற்று முன்திலம் வியாழக்கிழமை பதவியேற்றுக் கொண்டார்.

கொழும்புப் பிரதிப் பொலிஸ் மாஅதிபராக கடமை யாற்றிய ஜெகத் விஜயவர்த்தனாவின் இடத்திற்கு இவர் நியமிக்கப் பட்டுள்ளார். (ச)

இலங்கை விமானப் படையின் முதலாவது பெண் அணியினர் நேற்று அணிவகுப்பு

இலங்கை விமானப் படையில் முதலாவது பெண் அணியினர் தமது பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறும் நிகழ்வு நேற்று கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தில் நடைபெற்றது.

இந்த அணியில் 146 பெண் விமானப்படையினர் இடம் (8 ஆம் பக்கம் பார்க்க)

இரு தபாலதிபர்களும் விடுதலை ஏனைய ஊழியர் இருவர் விசாரணையில்

(வவுனியா)

கடந்த புதன்கிழமை வவுனியா பிரதமதபாலகத்தில்கடமை புரியும் இருதபாலதிபர்கள்உட்பட4உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டதில் இரு தபாலதிபர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குகதாஸன், சுப்பிரமணிய (8 ஆம் பக்கம் பார்க்க)

பேரணியில் கலந்து கொள்வோருக்கு போக்குவரத்து ஒழுங்குகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய முன்றலில் ஆரம்பமாகவுள்ள சமாதானப் பேரணியில் மக்கள் பெருமளவில் கலந்து கொள்வதற்கு வசதியாக இன்று போக்குவரத்து ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து பேரணி ஆரம்பமாகவுள்ள நல்லூர் முருகன் ஆலய முன்றலுக்குச் செல்வதற்கு இ.போ.ச. பஸ் வண்டிக்கும், மினிபஸ் வண்டிக்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பேரணியில் கலந்து கொள்வோர் பஸ் நிலையத்திற்கு இன்று காலை சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள் (8ஆம் பக்கம் பார்க்க)

அண்ணனைப் பிடிக்கச் சென்ற தங்கைக்கு தலையில் கத்தி வெட்டு

(யாழ்ப்பாணம்)

அண்ணனுக்கும் அயல் வீட்டுக் காரருக்கும் ஏற்பட்ட தகராறில் இடையில்புகுந்த தங்கை தலையில் வெட்டுக் கிலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு (8 ஆம் பக்கம் பார்க்க)

காணாமல் போனோரை மீட்க உதவுக பிரிட்டிஷ் தூதுவரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் படையினரால்கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் விடயத்தில் தாங்கள் அரசுடன் தொடர்பு கொண்டு அவர்களை மீட்டுத்தர நவவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு கோரும் கடிதம் (8ஆம் பக்கம் பார்க்க)

செயற் குழுக் கூட்டம்

(கொழும்பு)

பொதுஜனஐக்கிய முன்னணியின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஐக்கியதேசியக் கட்சியுடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(வ-ச)

கிளிநொச்சியில் மேலும் மூன்று மனித எலும்புக் கூடுகள் மீட்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் மூன்று மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளது.இம் மூன்று எலும்புக் கூடுகளுடன் இதுவரை மொத்தம் 41எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. [8ஆம் பக்கம் பார்க்க]

கொழும்பு நகரசபை குண்டு வெடிப்பு விசாரணைகள் ஏப்ரல் 7ம் திகதி

(கொழும்பு)

கொழும்பு நகரசபை மண்டப குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை ஏப்ரல் மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜி. டி., குல (8ஆம் பக்கம் பார்க்க)

குமார் படுகொலை தொடர்பாக ஆணைக்குழு நியமிக்கவும்! ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் படுகொலை தொடர்பான விசாரணைகளில் (8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சின்னஞ்சிறு விளம்பரம்

தேவை

பிரபல முள்ளபுத்தக சாலைக்கு இலிகிதர், விற்பனையாளர்கள் உடன் தேவை இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (அனுபவமுள்ளவர்களுக்கு முதலிடம்) 26-3-2000 காலை 8-10 மணிவரை தொடர்புகொள்ளலாம். 363, K.K.S. றோட் யாழ்ப்பாணம்.

(260)

புகையிலை அறுவடை மந்தம்

(மந்துவில்)

வடமராட்சிப் பகுதியில் புகையிலை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது, ஒப்பீட்டளவில் சென்ற வருடங்களை விட இந்த ஆண்டு குறைந்தளவு புகையிலையே செய்கைபண்ணப்பட்டுள்ளது.

தரமான புகையிலை செடி ஒன்று 70ரூபாவாகவும் ஏனையவை ஒன்று 50ரூபாவாகவும் விவசாயிகளால் விற்பனவு செய்யப்படுகிறது.

(க-39)

இலங்கை அழகான வீடு தான் ஆனால் ஓடுவது இரத்தம் அல்லவா?

சம்பந்தன் எம். பி. வேதனை

(கொழும்பு)

அமெரிக்க அதிபர் கிளின்டன் இலங்கைக்கு விஜயம் புரியாததையிட்டு பல எம்.பி.க்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எமதுநாடு சிறியநாடு மிகவும் குழப்பம் நிலவும் நாடென சர்வதேசரீதியாக நோக்கப்படும் நாடு பல்லின சமூகம் சமாதானத்துடன் வாழாமலிருக்கும் நாடெனப் பார்க்கப்படும் நாடு. எமது நாடு அழகான வீடுதான், ஆனால் முற்றுமுழுதாக ஒழுங்கின்றிக்கிடக்கும் வீடு. அதனை ஒழுங்குபடுத்துவதும் அவசியம். எமது வீட்டுக்குள் இரத்தம்பெருக் கெடுத்தோடுகிறது.

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட எம். பி. இரா. சம்பந்தன் கூறியுள்ளார்.

''நோர்வேயிடம் சொந்த நிகழ்ச்சித்திட்டம் இருக்கலாம் ஆனால் அதன் அனுசரணையை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வது அவசியம்'' என்றும் அவர் தெரிவித்தார்.

(சி)

நியமனம்

மட்டக்களப்பு போதனா வைத்தியசலையின் சட்ட வைத்தியதிகாரியாக டாக்டர் எம்.எஸ்.எம். ஜாபீர் நியமிக்கப் பட்டுள்ளார் கடந்த 13 ம் திகதிமுதல் இந்நிய மனம் அமுலுக்குவந்துள்ளது.

(க-60)

கணவன்மார் கசிப்பு பாவனையில் குடும்பங்களோ பட்டினியின் விளிம்பில்

மனைவிமார்பி.செயலரிடம்முறையீடு

(தென்மராட்சி)

தாவளை இயற்றாளைப் பகுதியில் கசிப்புப் பாவனையில் ஈடுபட்டிருக்கும் தமது கணவனமார்களை மீட்டுத்தரும்படி இப் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண்கள் தென்மராட்சி பிரதேச செயலருக்குச் செய்து கொண்ட முறைப்பாட்டினைத் தொடர்ந்து இப்பகுதியில் கசிப்பு விற்பனையில் தீவிரமாக ஈடுபட்டிருந்த கடை ஒன்றினை பிரதேசசெயலர் அப்பகுதி சிராமசேவையாளர் மூலம் மூடியுள்ளார்.

கசிப்புப் பாவனையில்தம் கணவன்மார் ஈடுபட்டுள்ளதால், தமது குடும்பங்களில் வறுமையும் பட்டினியும் ஏற்படத் தொடங்கியிருப்பதாகவும், அதன் பொருட்டு தமது பிள்ளைகளைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்படும் எனவும் அப்பகுதிப் பெண்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் கசிப்பு விற்பனை செய்த கடை மூட்டப்பட்டதைத் தொடர்ந்து கசிப்புப் பாவனையாளர் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிய வருகிறது.

(க-77)

நாடுகடத்தப்பட்ட தமிழர்கள் ஜேர்மனியில் 8 வருடம் இருந்தவர்கள்

(கொழும்பு)

ஜேர்மனியிலிருந்து கடந்த வாரம் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்த 20தமிழர்களும் கடந்த எட்டுவருடங்களாக ஜெர்மனியில் அரசியல் புகலிடம்கோரி தஞ்சமடைந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆவணங்கள் ஏதும் இல்லாத நிலையில் நாட்டுக்குள் பிரவேசித்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டு இவர்கள் மீது நீர் கொழும்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் விசாரணை யூன் மாதம் 6 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இவர்கள் சார்பில் சட்டத்தரணி நடராஜா ரவிராஜ் ஆஜரானார்.

இவர்கள் தலா 50 ஆயிரம் சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது ஞாபகமிருக்கலாம்.

இவர்களில் 17 பேர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள்மற்றுமிருவர் திருகோணமலை, நீர்கொழும்புப் பகுதிகளையும் ஏனையவர் கொழும்பையும் சேர்ந்தவர்களாவர்.

(சி)

அரியாலைப் பகுதி வாலிபர்கள் இருவர் படையினரால் கைது

(யாழ்ப்பாணம்)

பூம்புகார் அரியாலையைச் சேர்ந்த பூவுலிங்கம் தயாபரன் (வயது 21) என்னும் தையல்தொழில் செய்யும் இளைஞர் கடந்த 23 ஆம் திகதியன்று கடைக்குப் பாண் வாங்கச்சென்ற இடத்தில் கனகரத்தினம் வீதியில் வைத்து இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 512 பிரிகேட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரை கைது செய்தமைக்கான ரசீதும் இராணுவத்தால் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நாவலடி அரியாலையைச் சேர்ந்த ஆனந்தன் சிவா (வயது 28) என்னும் கூலி வேலை செய்யும் இளைஞர் இதேதினத்தன்று கூலி வேலை செய்துகொண்டு இருக்கும்போது (கனகரத்தினம் வீதியில்) இராணுவத்தால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு 512 பிரிகோட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரை கைதுசெய்தமைக்கான ரசீதும் இராணுவத்தினரால் கொடுக்கப்பட்டுள்ளது.

இவர்களின் கைதுகள் தொடர்பாக மனிதகௌரவத்திற்கான மன்ற வடபிராந்திய இணைப்பாளர் ஐ. சிவராசா விடம் முறையிடப்பட்டுள்ளது.

(சி)

பரிசளிப்பு விழா

ஹற்றன் நஷனல் வங்கியின்

ஆதரவுடன்

யாழ். இந்துக் கல்லூரி சதுரங்ககழகத்தினால் இன்று நடாத்தப்பட இருந்த பரிசளிப்பு விழா நாளை (26-03-2000) ஞாயிறு மாலை 2 மணிக்கு நடை பெறும் என்பதை |சகல பாடசாலைகளுக்கும் அறியத்தருகிறோம்.

கி/141

பயண அனுமதி வழங்கப்பட்டோர்.

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 24 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

சாவகச்சேரி

129811 ஏ	129811 பி
129811 சி	129811 டி
129811 ஈ	129826 ஏ
129826 பி	129826 சி
129865 ஏ	129865 பி
129916 ஏ	129982 ஏ
131234 ஏ	131234 பி
131243 ஏ	131243 பி
131295 ஏ	131295 பி
151309 ஏ	131309 பி
131390 ஏ	131394 ஏ
	137381 ஏ
137381 பி	137385 ஏ
137385 பி	137386 ஏ
137393 ஏ	137407 ஏ
137413 ஏ	137413 பி
137420 ஏ	137420 பி
137421 ஏ	137421 பி
137421 சி	137421 டி
137424 ஏ	137424 பி
137452 ஏ	137483 ஏ
137483 பி	137484 ஏ
137485 ஏ	137487 ஏ
137499 ஏ	137499 பி
137500 ஏ	137500 பி
137505 ஏ	137505 பி
137506 ஏ	137507 ஏ
137508 ஏ	137508 பி
137512 ஏ	137519 ஏ
	137519 பி
137521 ஏ	137521 பி
137522 ஏ	137526 ஏ
137531 ஏ	137531 பி
137531 சி	137531 டி
137535 ஏ	137537 ஏ
137537 பி	137544 ஏ
137544 பி	137545 ஏ
137545 பி	137546 ஏ
137548 ஏ	137559 ஏ
137563 ஏ	137570 ஏ
137570 பி	137578 ஏ
137578 பி	137580 ஏ
139232 ஏ	139232 பி
139233 ஏ	139237 ஏ
139240 ஏ	139243 ஏ
139243 பி	139245 ஏ
139245 பி	139245 சி
139245 டி	139253 ஏ
139253 பி	139253 சி
139257 ஏ	139285 ஏ
139286 ஏ	139297 ஏ
139297 பி	139297 சி
139297 டி	139302 ஏ
139313 ஏ	139313 பி
139313 சி	139313 டி
139313 ஈ	139344 ஏ
139376 ஏ	139377 ஏ
139377 பி	120990 ஏ
120990 பி	131443 ஏ
131478 ஏ	131494 ஏ
131494 பி	131498 ஏ
131498 பி	131524 ஏ
131524 பி	131524 சி
134894 ஏ	134894 பி
134894 சி	135450 ஏ
135458 ஏ	135460 ஏ
135460 பி	135460 சி
139190 ஏ	139190 பி
131906 ஏ	131907 ஏ

நரவெட்டி

125877 ஏ	125877 பி
125877 சி	129593 ஏ
129605 ஏ	129627 ஏ
129644 ஏ	129644 பி
130941 ஏ	131000 ஏ
131131 ஏ	131131 பி
131184 பி	131228 ஏ
131228 பி	132447 ஏ
132447 பி	135180 ஏ
135258 ஏ	135258 பி
135258 சி	135340 ஏ
135341 ஏ	135342 ஏ
135342 பி	125342 சி
135342 டி	135382 ஏ
135413 ஏ	135418 ஏ
135425 ஏ	137587 ஏ
137587 பி	137612 ஏ
127621 ஏ	137656 ஏ
137747 ஏ	137764 ஏ
137764 பி	137764 சி
137777 ஏ	137778 ஏ
137781 ஏ	137782 ஏ
137789 ஏ	137791 ஏ
137795 ஏ	137799 ஏ
137799 பி	137799 சி
137799 டி	137799 ஈ
137808 ஏ	137893 ஏ
127893 பி	137956 ஏ
138061 ஏ	138061 பி
138061 சி	

மருதங்கேணி

131895 ஏ	131910 ஏ
131910 பி	131918 ஏ
131918 பி	331918 சி
132919 ஏ	135234 ஏ
135234 பி	135234 சி
135234 டி	135346 ஏ
135348 ஏ	135348 பி
135348 சி	135348 டி
135365 ஏ	135366 ஏ
135366 பி	

பளை

131920 ஏ	139483 ஏ
139483 பி	

பருத்தித்துறை

125591 ஏ	125591 பி
131184 ஏ	132445 ஏ
132554 ஏ	132554 பி
132554 சி	132554 டி
135096 ஏ	135123 ஏ
135222 ஏ	135222 பி
135222 சி	135222 டி
135235 ஏ	135235 பி
135265 ஏ	135282 ஏ
135282 பி	135316 ஏ
135356 ஏ	135356 பி
135356 சி	135356 டி
135364 ஏ	135364 பி
135371 ஏ	135371 பி
135376 ஏ	135376 பி
135405 ஏ	137605 ஏ
137627 ஏ	137627 பி
137627 சி	137627 டி
137627 ஈ	137627 எவ்
137636 ஏ	137636 பி
137660 ஏ	137662 ஏ
137662 பி	137662 சி
137704 ஏ	137704 பி
137707 ஏ	137723 ஏ
137723 பி	137723 சி
137735 ஏ	137735 பி
137767 ஏ	137779 ஏ
137787 ஏ	137788 ஏ
137839 ஏ	137839 பி
137918 ஏ	137959 ஏ

(இராசி பலன்)

25.03.2000
சனிக்கிழமை
(தமிழுக்கு பங்குனி - 12)

பஞ்சமி பகல் 1.43 வரை, அனுஷம் நள்ளிரவு 12.30 வரை, சித்தயோகம் இராகுகாலம் காலை 9.45 முதல் 11.15 வரை, சுபநேரம் மாலை 3.44 முதல் 5.14 வரை,

மேடம்:
கயவர்துன்பம், மனச்சுமை அலைச்சல்.

இடபம்:
தயாளசிந்தை, புதிய வாய்ப்பு, பொருள்வரவு.

மிதுனம்:
மனக்களிப்பு, உறவில் திருப்தி, பயணம்.

கடகம்:
வாக்குவாதம், கல்நெஞ்சம், பணமுடை.

சிங்கம்:
முட்டுக்கட்டை, அபவாதம் வேதனை.

கன்னி:
புதியஸ்தானம், தொழில் சிறப்பு, நண்பர் உதவி.

துலாம்:
முதியோர் கவலை, குடும்ப பிரிவு, அகால உணவு.

விருச்சிகம்:
காரியசித்தி, ஞானிகள் உபதேசம், வெகுமதி.

தனுசு:
தப்பபிப்பிராயம், பெண் வெறுப்பு, ஆவேசம்.

மகரம்:
பெரியோர் ஆசி, முயற்சி பாலிதம்' தனவரவு

கும்பம்:
சகோதரவாஞ்சை, இனிய கற்பனை, கடித உறவு,

மீனம்:
தெளிவீகப்பணி, சுபகாரியம், மாதர்நட்பு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

திருத்தாண்டக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடாத்தும் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருத்தாண்டக முற்றோதல் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 7.00மணிக்கு யாழ். நல்லூர் தேரடி அறுபத்து மூன்று நாயன்மார் மடத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறுகின்றது.

(செ)

வருடாந்த பொதுக்கூட்டம்

(வட்டுக்கோட்டை)

அராலி மத்தி தறணன் முருகன் ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2. 30 மணிக்கு நடைபெறவுள்ளதாக நிர்வாகத்தினர் அறிவிக்கின்றார்கள்.

(செ-24)

முதுதத்துவமானி பட்டம்

(மந்துவில்)

யாழ்.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆசிரியர் கணபதிப்பிள்ளை நவரத்தினம் முதுதத்துவமானிப்பட்டம் பெற்றுள்ளார்.

தமிழ்த்துறையில் யாழ். பல்கலைக் கழக 1999ஆம் ஆண்டு.. நன்னூலரின் பதவியற்கோட்பாடுகள் ஓர் ஆய்வு என்ற தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்து முதுதத்துவமானிப்பட்டம் பெற்றுள்ளார்என்பது குறிப்பிடத்தக்கது.

(க-23)

பலாலி விமானத்தளத்தை சூழவுள்ள பகுதி

உயர் பாதுகாப்பு வலயம் பிரகடனம் உடன் நிறுத்தப் படவேண்டும்

த. வி. கூட்டணி ஜனாதிபதியிடம் வலியுறுத்து.

(கொழும்பு)

வலி - வடக்கில் அமைந்துள்ள பலாலி விமானத்தளத்தை சூழவுள்ள 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப் பட வேண்டும்.

மேற்கண்டவாறு கடந்த 22 ஆம் திகதியன்று ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்திய தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலி-வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் குடிகொண்டுள்ள இராணுவத்தினர் வெளியேறி, மக்கள் அங்கு குடியேறவும் பாடசாலைகள் நடாத்தப்படவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதியை அலரிமாளிகையில் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கிய விடயங்கள் சம்பந்தமாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடினர். இச்சந்திப்பின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த துணைத் தலைவர் திரு. வீ. ஆனந்த சங்கரி, செயலாளர் நாயகமும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திரு. இரா. சம்பந்தன் மட்டக்களப்பு மாவட்ட பா. உக்களான ஜோசப் பரராஜசிங்கம், பொ. செல்வராசா கி. துரைராசசிங்கம் தேசியப் பட்டியல் பா. உ. மாவை. சேனாதிராசா ஆகியோர் பங்குபற்றினர்.

பிற்பகல் 8.45 மணியளவில் ஆரம்பித்த கலந்துரையாடல் 10.45 அளவில் நிறைவேற்றது.

பொத்துவில் தொகுதியில் உள்ள ஆலையடிவேம்பு, சருங்கொடித்தீவு ஆகிய இரு பிரதேச செயலகங்களும் இப் போதுள்ளவாறே தொடர்ந்தும் இருக்கவேண்டும். ஏதாவது மாற்றம் செய்யவேண்டுமெனில் நாட்டுநிலைமை சுமுகமடைந்தபின் அதுபற்றிச் சிந்திக்கலாம். எனவே கருங்கொடித்தீவு பிரதேசச் செயலகத்தின் எல்லைகளை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளை நிறுத்திவைக்கும் வகையிலான கட்டளைகளை ஜனாதிபதி பிறப்பிக்கவேண்டும்.

கல்முனை உப பிரதேச செயலகத்துக்கு பிரதேச செயலக அந்தஸ்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1999 - 2003 க்கான நோர்வே அரசின் 500 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப்பட விருந்த டேபா திட்டம் பாதுகாப்பு அனுமதியின்மையால் தடைப்பட்டுள்ளது. எனவே மட்டக்களப்பு மாவட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசம் அல்லாத பிரதேசம் என்று பாகுபடுத்தப்படாது இந்தத் திட்டத்தின் கீழ் வருகின்ற எல்லாத் திட்டங்களையும் அமுல்படுத்துவதற்கான உத்தரவை ஜனாதிபதி வழங்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கென திட்டமிடப்பட்டுள்ள அனுமதி (பாஸ்) நடைமுறையை நடைமுறைப்படுத்தக்கூடாதென்றும் அது இப்பிரதேச மக்களுக்கு மேலும் ஒரு சுமையாக அமையும் என்றும் விபரிக்கப்பட்டது.

27.10.99 அன்று ஜனாதிபதி அவர்கள் மட்டக்களப்பு விபுலானந்த இசை நடனக் கல்லூரியை கிழக்குப் பல்கலைக்கழகத்துடன்இணைக்க வேண்டும் என்று கொள்கையளவில் ஏற்று அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் கௌரவ நிச்சட்பத்திரணவுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ள பொழுதிலும், இது சம்பந்தமான நடவடிக்கைகள் மிகவும் மந்தமான நிலையிலேயே இருப்பதனால் இதனைத் துரிதப்படுத்த கட்டளைகள் பிறப்பிக்கப்படவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலைமை சுமுகமடையும் வரையில் புதிய பிரதேச செயலகங்களையோ, பிரதேச சபைகளையோ அமைப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைக்கவேண்டும்.

கல்குடாத் தொகுதியிலுள்ள கிரான்புல்சேனை அணைக்கட்டை கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபோதிலும், பாரிய இயந்திரங்களைக் கொண்டு செல்வதற்காக அனுமதியை பாதுகாப்பு இணைப்பதிகாரி வழங்காமையினால் இவ்வேலை தாமதமாகிறது. எனவே குறித்த அந்த அனுமதியைவழங்குமாறு இணைப் பதிகாரி பணிக்கப்பட வேண்டும்,

பழம்பெரும் சிவத்தலமான திருக்கேதீஸ்வர ஆலய பிரதேசத்திலிருந்து இன்னமும் இராணுவத்தினர் முழுமையாக வெளியேறவில்லையென்றும், அவர்கள் கூடியவிரைவில் வெளியேறி அங்கு நித்திய நைமித்திய கிரியைகள் நடைபெற வழிவகை செய்ய வேண்டும். ஜனாதிபதி குறித்த அதிகாரிகளுக்குப்பணிப் புரைகள் வழங்குவதன்மூலம் இந்தக் கோரிக்கைகளை நடைமுறைப் படுத்த ஆவன செய்வதாக வாக்களித்துள்ளார். (க)

தட்டெழுத்தாளர் சேவை தரம்-1 பரீட்சை மட்டக்களப்பிலும் நிகழும்

(மட்டக்களப்பு)

இன்று 25 ஆம் திகதி ஆரம்பமாகும் அரச தட்டெழுத்தாளர்சேவை தரம் ஒன்றிற்கான பதவி உயர்வுப் பரீட்சை மட்டக்களப்பிலும் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்காக முன்னர் பரீட்சார்த்திகள் கொழும்பிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு செல்வதிலுள்ள பிரச்சினைகள், செலவுகள், காலதாமதம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பரீட்சை ஆணையாளருடன் மட்டக்களப்பு மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் பொ. செல்வராசா பேச்சுவார்த்தை நடாத்தியதையடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பில் நடைபெறவிருந்த மொழிபெயர்ப்பாளர் பயிற்சிக்கருத்தரங்கு எதிர்வரும் 27 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது. தகுதிவாய்ந்த பயிற்றுநர்கள் மட்டக்களப்பில் இல்லையென்ற காரணத்தினால் கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியிருந்த மேற்படி கருத்தரங்கு பொன். செல்வராசா எம்.பி. யின் தலையீட்டினாலேயே இங்கு நடைபெறவுள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது. (சி-60)

ஏமாற்றத்தின் எதிரொலியே தமிழ் வாலிபர் தொடுத்த யுத்தம்

பிரதிமந்திரி சொல்கிறார்

[கொழும்பு]

''தமிழ் இளைஞர்கள் நீண்ட காலம் ஏமாற்றப்பட்டு வந்ததன் விரக்தியிலேயே இந்த யுத்தம் ஏற்பட்டது. அதன் பின்னரே பிரிவினை வாதம் ஏற்பட்டு தமக்கும் நாட்டின் ஒரு பகுதி தேவை என்றனர். விரக்தி அகற்றப்படுவதற்கு யுத்தத்தை நாடினர்.''

இவ்வாறு பிரதியமைச்சர் டிலான் பெரேரா கூறினார்.

''நல்ல தீர்வை ஏற்படுத்த தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.'' என்றும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

மறியல் போராட்டம்

(திருமலை)

திருமலை மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் 250 பேர்நேற்று முன்தினம்காலை 8மணிமுதல் வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முன்னால் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி மறியல்ப் போராட்டத்தை நடத்துகின்றனர்.

இவர்களின் இம் மறியல்ப் போராட்டம் நேற்று முன்தினம்இரவுவரை தொடர்ந்து நடைபெற்றதுடன் தொடர்ந்து இரவு பகலாக நடைபெறும் என்றும்தெரிவிக்கப்படுகிறது.

தொண்டர் ஆசிரியர் பிரதிநிதிகளை வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா பேச்சுவார்த்தைக்கு அழைத்த போதும் அவருடன் பேச மறுத்த ஆசிரியர்களின் பிரதிநிதிகள் உயர் கல்வியமைச்சரிடமிருந்து பதில் வரும் வரை போராட்டம் இரவு பகலாகத் தொடரும் என தெரிவித்துள்ளனர்.

சேவை நலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

முப்பத்தைந்து வருடங்கள் ஆசிரிய'சேவையாற்றி இளைப்பாறிய கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆசிரியை திருமதி நாகமனோன்மணி நடராஜாவின் சேவைநலன் பாராட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப.2.30மணிக்கு மேற்படி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (செ)

காமுகரின் கோரப் பசிக்கு இரையான அப்பாவி யுவதி

[கொழும்பு]

'காமுகர் நெஞ்சில் நீதியில்லை' என்பதற்கு உதாரணமாக நவகமுவ-கடுவெல பாலத்திற்கு அருகில் நிகழ்ந்துள்ள படுபாதகச் செயல் ஒன்று பற்றி தெரிவிக்கப்படுகிறது.

சம்பவதினம் இரவு 11.00 மணியளவில் ஆட்டோ ஒன்றில் வந்த 30 வயதுடைய யுவதியை அங்குள்ள சோதனைச் சாவடியில் கடமையில் (?) இருந்த பொலிஸ்காரர் ஒருவர் வழி மறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறி தனியிடம் ஒன்றுக்குக் கூட்டிச் சென்று தனது இச்சைக்கு இணங்குமாறு பலவந்தப்படுத்தினாராம். அச்சமுற்ற யுவதி அதற்கு மறுக்கவே அங்கு காணப்பட்ட காடையர் கோஷ்டி ஒன்றிடம் யுவதியை ஒப்படைத்தாராம் அவர். காமுகரின் கோரப் பசிக்கு இரையானார் அவள். சம்பவம் பற்றி பொலிஸ் நிலையம் சென்று யுவதி புகார் செய்ததனையடுத்து பிரஸ்தாப பொலிஸ்காரர் கைதானார். அந்த யுவதி ஒரு பொலிஸ்காரரின் வீட்டில் பணிப் பெண்ணாகப் பணிபுரிந்து வருபவர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. (சி)

கடந்த 7 வருடங்களுக்கு முன்

இறந்தவரின உடல் குழியிலிருந்து மீட்பு கிரியைகளின் பின் மீண்டும் புதைப்பு

இளவாலையில் சம்பவம்

(இளவாலை)

கடந்த 7 வருடங்களுக்கு முன் இறந்த முதியவரின் உடலை அடக்கம் செய்த குழி தோண்டப்பட்டு பெறப்பட்ட எலும்பை திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டபின் மீண்டும் நல்லடக்கம் செய்யப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் இளவாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

இளவாலைப் பகுதியில் 1992 இல் இடம்பெற்ற இடப்பெயர்வின் பின்னர், 77 வயதான அன்ரன் பொன்னுத்துரை என்ற முதியவர் தனிமையிலேயே வசித்து வந்தார்.

பின், 1993 ஆம் ஆண்டு மூப்பு காரணமாக இயற்கை மரணமெய்தியபோது, அவருடைய வீட்டுவளவினுள்ளேயே அப்போதைய அருட்தந்தையால் உடல் அடக்கம் செய்யப்பட்டிருந்தது.

கனடாவில் வசித்து வந்த முதியவரின் மனைவி, தனது கணவனுடைய உடல் உரிய வகையில் நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என்று விரும்பினார்.

இதனையடுத்தே உடல் புதைக்கப்பட்ட குழி தோண்டப்பட்டு உரிய சமயக்கிரியைகள் நடாத்திய பின்னர் மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது.

மேற்படி முதியவர் முன்பு இராணுவ, பொலிஸ் எழுதுவினைஞர் சேவைகளை ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில்

விமானப்படையினரின் தடைகளை எதிர்த்து மறியல் போராட்டம்

புதுநகர் சித்தி விநாயகர் ஆலயத்தில் பூசைகள் நடைபெறுவதற்கும் ஆலயடிச் சோலை மயானத்தில் பிரேதங்கள் தகனம்செய்வதற்கும், விமானப் படையினரால் விதிக்கப்பட்டிருக்கும் தடைகள்,புது நகர் விநாயேஸ்வரா வித்தியாலயத்தில் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் மாணவர்கள்,ஆசிரியர்கள் போன்ற எவரும் நடமாடக் கூடாது ஆகிய தடைகளை நீக்கக் கோரியே இம் மறியல போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இம் மறியல் போராட்டத்தின் காரணமாக ஒரே கட்டடத்தில் உள்ள மட்டக்களப்பு மாநகர சபை, மட்டக்களப்பு பிரதேச சபை ஆகியன முற்றாகச் செயலிழந்தன.

இதனை அடுத்து மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா, விமானப் படைத் தலைமை அதிகாரி ஜி.டி.பெரேரா ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பருவகாலச் சீட்டுக்கள் விற்பனை இனிமேல் யாழ். பஸ் நிலையத்தில்

பருவகாலச் சீட்டுக்கள் விற்பனை இனிமேல் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் வைத்தே மேற்கொள்ளப்படவுள்ளதாகவடபிராந்தியபோக்குரத்து சபையின்கோண்டாவில் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் பருவகாலச் சீட்டுக்கள் கோண்டாவில் சாலையில் வைத்தே விநியோகிக்கப்பட்டு வந்தது.

இதனால் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்வதால் அதனை நீக்கும் முகமாகவே மேற்கண்ட முடிவு மேற்கொள்ளப்பட்டதாக கோண்டாவில் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள்,பல்கலைக்கழக மாணவர்கள்,வயதுவந்த தொழில்புரிவோர் ஆகியோர் பருவகாலச சீட்டுக்களை பயன்படுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.(க)

சமரசப் பேச்சுக்குத் தயார்: ஆனால் பாக். தீவிரவாதம் நீங்க வேண்டும்

கிளின்டனுக்கான விருந்தில் இந்திய ஜனாதிபதி

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த இந்தியா ஆயத்தமாக இருக்கின்றது என்றும் ஆனால் எல்லைக்கு அப்பாலிருந்து தீவிரவாதத்தை பாகிஸ்தான் தூண்டி விடுவதை நிறுத்த வேண்டும் என்றும் இந்திய ஜனாதிபதி திரு.கே. எஸ். நாராயணன் தெரிவித்தார்.

இந்தியா வந்திருக்கும் அமெரிக்க அதிபருக்கு இரவு விருந்தளித்துப் பேசுகையில் திரு. நாராயணன் எல்லைக்கு அப்பாலிருந்து தூண்டப்படும் பயங்கரவாதத்திலிருந்து இந்தியா தன்னைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானுடன் அமைதியான முறையில் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளவே விரும்புகிறது.

அதேவேளை எல்லைக்கு அப்பாலிருந்து பயங்கரவாதத்தைத் தூண்டிவிடவும் கட்டுப் பாட்டுக் கோட்டுப் பகுதியில் ஆக்கிரமிப்பைச் செய்யவும் பாகிஸ்தானுக்கு உரிமை கிடையாது என்றும் இந்திய ஜனாதிபதி கூறினார்.

இந்திய துணைக்கண்டம் உலகின் மிக ஆபத்தான பகுதியென வர்ணிக்கப்படுவதை நிராகரித்த அவர் பாகிஸ்தானுடன் பேச்சுகள் நடத்த இந்தியா ஆயத்தமாக இருக்கிறதென்று எடுத்துரைத்தார்.

இந்தியாவிற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து கிடைப்பதற்கு அமெரிக்கா உதவவேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

(து-சி)

மரண வாசல் சென்று மீண்ட கியூபா சிறுவனின் எதிர்காலம்

நீதிமன்றத் தீர்ப்பையடுத்து சர்ச்சை

(ஹவானா)

கியூபா நாட்டுச் சிறுவனான எலியன் என்பவனை அவனது தந்தையிடம் கியூபாவுக்குத் திருப்பியனுப்ப வேண்டும் என்னும் அமெரிக்க குடிவரவு அதிகாரிகள் எடுத்த முடிவை ஆதரிக்கும் வகையில் சமஷ்டி நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

சமஷ்டி நீதிபதியின் இத் தீர்ப்பினை கியூபா நாட்டு ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ முழுமனதுடன் வரவேற்றுள்ளார்.

இதனையடுத்து 6 வயதுச் சிறுவனின் தந்தையின் விருப்பம் பற்றி பொருட்படுத்தக் கூடாது என்றும் சிறுவனுக்கு அரசியல் புகலிடம் வழங்கப்பட வேண்டும் என்றும் மியாமியில்உள்ளசிறுவனின் உறவினர்கள் தாக்கல் செய்திருந்த வழக்கைஅமெரிக்கச் மாவட்ட நீதிபதி தள்ளுபடி செய்துள்ளார்.

இருப்பினும் கம்யூனிஸ நாடான கியூபாவை விட அமெரிக்காவில் எலிபனுக்கு நல்ல எதிர்காலம் இருப்பதாகக் கருதும் அவனுடைய உறவினர்கள் நீதிபதியின் தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்போவதாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த வருட நவம்பர் மாதம் கியூபாவில் இருந்து அமெரிக்காவுக்குச் சட்ட விரோதமாகக்குடியேற வந்தவர்களுடைய படகு சோல்டோ கடற்பரப்பில் கவிழ்ந்ததும்.

மற்றையஅனைவரும்மரணமாக சிறுவன் மட்டும் மீட்கப் பட்டதையடுத்து சர்வதேச ரீதியில் சிறுவன் தொடர்பானசர்ச்சைகள் தோன்றியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி-9)

பிரதமர் வாஜ்பாயின் ஹிந்தி உரைக்கு தி. மு. க, தலைவர் கண்டனம்

[புதுடில்லி]

இந்திய நாடாளுமன்றத்தில் பிரதமர் வாஜ்பாய் ஹிந்தியில் உரையாற்றியமை தொடர்பாக தமிழக முதல்வர் மு. கருணாநிதி கடுமையாக ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் தனது ஆட்சேபத்தில் தெரிவித்திருப்பதாவது வரலாற்று சிறப்புமிக்க ஒரு நிகழ்ச்சியில் சமாஜ வாதிக்கட்சியின் தலைவர் முலாயம்சிங் யாதவ்வின் வற்புறுத்தலின் பேரில் பிரதமர் ஹிந்தியில் உரையாற்றியதின் காரணமாக உலக மக்கள் அவர் நேரடியாக என்ன பேசினார் என்பதை அறிந்து கொள்ள முடியாது போனது வேதனைக்குரிய விஷயம் என்று கூறியுள்ளார். (வ)

லண்டனில் இந்தியத் தூதரகம் முன் சீக்கியர்கள் ஆர்ப்பாட்டம்

லண்டனிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு முன்பாக பல நூற்றுக்கணக்கான சீக்கியர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய அரசே திட்டமிட்டுச் சீக்கியர்களைப் ஜம்முவில் படுகொலை செய்ததென்றும் அமெரிக்கத் தலைவர் பில் கிளின்டன் இந்தியா வந்திருக்கும் போது தம்பக்க உணர்வலையைத் திசை திருப்பவே இது நடந்ததென்றும், சுலோக அட்டைகளைத் தாங்கியபடியும் கோஷமிட்டபடியும் ஆர்ப்பாட்டத்தில் இந்நடவடிக்கையைமேற்கொண்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (து-சி)

இனவிரோதப் போக்கை கைவிடாது விட்டால் சர்வதேச உதவியில்லை

கொசோவோ மக்களுக்கு எச்சரிக்கை

(லண்டன்)

கொசோவோ மக்களுக்கு நேட்டோ அமைப்பின் செயலாளர் நாயகம் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

கொசோவோவில் வாழும் சேர்பிய, அல்பேனிய இனத்தவர்களால் அங்கு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள காடைத்தனங்களைக்கண்டிக்கும்முகமாகவே இந்த எச்சரிக்கைவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சேர்பியர்களும் அல்பேனியர்களும் சேர்ந்துவாழும் மெற்றோவிக்கா நகரிலும், வேறு பகுதிகளிலும் நடைபெற்றுவரும் இனப்பிரச்சினைகள் கைவிடப்பட வேண்டும்.

கொசோவோ மக்களுக்கு பின்னடைவை ஏற்படுத்தவல்ல இனவிரோதக் கொள்கைகளைக் கைவிடாது விட்டால் அனைத்துலக சமூகத்தினதும் உதவிகளை இழக்க வேண்டி நேரிடலாம் எனவும் நேட்டோ அமைப்பின் செயலாளர் எச்சரித்துள்ளார்.

இதேசமயம், நேட்டோப் படைகள் கொசோவோவில் வான்தாக்குதல்களை ஆரம்பித்து ஓராண்டுப்பூர்த்திநேற்றாகும் அதனால் அங்குபெரும் வன்முறைகள் வெடிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (சி-9)

புலிகளில் லயித்து கிளின்டனும் புதல்வியும் படம் எடுத்தனர்

(புதுடில்லி)

சரித்திர கீர்த்தி பெற்ற ராஜஸ்தானுக்குத் தனது மகள் செல்ஷீ சகிதம் கடந்த வியாழக்கிழமை விஜயம் மேற்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டனுக்கு அங்கு ராஜ வரவேற்பளிக்கப்பட்டது.

அங்குள்ள புலிகள் சரணாலயத்துக்கும் சென்று அவர்களும் இருவரும் கம்பீரம்மிக்க புலிகளைக் கண்டு களிப்புற்றதாகவும் புலிகளுடன் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தூய்மையான காதலின் சின்னமாக காலக்தால் அழியாவண்ணம் திகழும்தாஜ்மஹாலுக்கும்கிளின்டன் சென்று பரவசமுற்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

எரிபொருள் விலையேற்றம் இந்திய மத்திய அரசு அறிவிப்பு

(புதுடில்லி)

கடந்த புதனிரவு திடீரென மண்ணெண்ணெய் மற்றும் காஸ் எரிபொருட்களின் விலையை இந்திய அரசு உயர்த்தியுள்ளது.

மண்ணெண்ணெய், காஸ் விலையேற்றத்தால் அடிமட்ட நடுத்தர மக்கள மிகப்பாதிப்படைந்துள்ளனர். என்றும் மார்க்ஷிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.எம்) எதிர்ப்புத் தெரிவிப்பதுடன் ஆர்ப்பாட்டங்களுக்கும் ஒழுங்குகள் செய்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர் தேவ கௌடாகாலத்துதிட்டத்தின் படியே விலையேற்றம் அறிவிக்கப்பட்டதென்று மத்திய அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (து)

எண்ணெய்க் குழாய் வெடித்து 50க்கும் கூடுதலானோர் கருகிச் சாம்பல்

நைஜீரியாவில் கோரச் சம்பவம்

நைஜீரியாவில் பெற்றோலிய எண்ணெய்க் குழாய்கள் வெடித்துச் சிதறியதால் ஏற்பட்ட பெரும்தீ விபத்தில் 50க்கு மேற்பட்டோர் கருகிச் சாம்பராகினர்.

எண்ணெய்க்குழாய்வெடிப்பினால் வெளியேறிய எண்ணெயைசேகரிப்பதில்போட்டி போட்டியிட்டுக் கொண்டு பலர் முண்டியடித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்களிலும் வந்து எண்ணெய் சேகரிக்க பலர் முற்பட்டபோது திடீரென ஏற்பட்ட தீயினால் 50க்கு மேற்பட்டோர் தீயில் கருகியிறந்தார்களென்றும் பலநூற்றுக்கணக்கானோர் எரிகாயங்களுடன் வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்களென்றும் ஒரு சிலரின் நிலை மிக ஆபத்தான கட்டத்தில் இருக்கிறது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (து-சி)

இந்திய. பாக்.விவகாரம், சுமுகமாக தீர்வு காண வேண்டியது அவர்களே

நடுநிலை வகிக்க நான் வரவில்லை என்கிறார் கிளின்டன்

(புதுடில்லி)

'நடுநிலையாளராக இங்கு நான் வரவில்லை இந்தியா பாகிஸ்தான் இடையேயான பிரச்சினைகளை அவர்களே பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று பில் கிளின்டன் தெரிவித்துள்ளார்.

இவ் வாரஇறுதியில் பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் முஷாரப்பைச் சந்திக்கும் போதும் இதனையே தான் சொல்லப் போவதாவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை,

பெண் கல்விக்கு கேரளா அரசு கொடுத்து வரும் முக்கியத்துவத்தைஅவர்பாராட்டினார்.

இந்தியாவைப் பொறுத்த மட்டில் உயிரியல் துறைகள் பொருளாதாரச் சீர்திருத்தங்கள், தகவல் தொழில் நுட்பம் போன்ற துறைகளின் முன்னேற்றத்தையும் அவர் வியந்து போற்றினார்.

கிளின்டன் இந்தியப் பிரதமருடன் அவர்களின் பேச்சுவார்த்தையில் முதலிடம் வகித்து வந்த அணுவாயுதத் தடை ஒப்பந்தத்தைப் பற்றி சில வரிகளே பேசினார்.

இந்தியா அணுவாயுத சோதனைகளில் ஈடுபடமுன் ஒன்றை உணர வேண்டும் அதாவது அணுவாயுத ஏவுகணைப் பரிசோதனைகளில் ஈடுபடும் போது அண்டை நாடுகளும் இதேபோல் ஈடுபடும் என்பதை மறந்துவிட லாகாது. அமெரிக்கா பனிப் போரில் பெற்ற அனுபவங்களை வைத்து இதனை கூறுகிறேன் என்றார் அவர்.

இந்த விடயத்தில் இந்தியா என்ன செய்ய வேண்டும் என்பதை தான் கூறப்போவதில்லையென்று கூறினார் கிளின்டன்.

ஜனநாயகம், வேற்றுமைகளுக் கிடையில் ஒற்றுமை, உலக மயமாக்கல் போன்ற இந்தியத்தத்துவங்கள் தம்மை மிகவும்கவர்ந்ததாகவும் அவர் கூறினார்.

இந்தியாவைப் பல வாளங்களைக் கொண்ட நாடாகத் தான்பார்பதாகவும்குறிப்பிட்டார். (து-சி)

செய்திக் குவியல்

★ பலஸ் தீனர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை போப் இரண்டாவது ஜான்போல் அவர்கள் ஆதரித்தார்.

★ சட்டவிரோதமாகத் துப்பாக்கிகள் தயாரிக்கப் பட்டதெனச்சந்தேகத்தின் பேரில் சேலத்தின் பொலிஸார் மூவரைக்கைதுசெய்துள்ளனர்..

★ இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் முன் சீக்கியர் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்நடைபெற்றது.

★ தமிழக முதல்வர் மு.கருணநிதி சட்டசபையில் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்பித்தார்.

★ இராஜஸ்தான் பெண்களின் முயற்சியைபாராட்டிப் பில்கிளின்டன் பேசியுள்ளார்.

★ அவுஸ்திரேலியா குடியரசாகப் போவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

இலண்டனில் இசைப்பணி

(சென்னை)

இசைப்புயல் எனப் புகழப்படும் ஏ.ஆர். ரஹ்மான் இங்கிலாந்தில்குடியேறுவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

தனது வீட்டிலேயே நவீன வசதிகள் கொண்ட ஒலிப் பதிவுக் கூடம் ஒன்றை அவர் உருவாக்கியுள்ளார்.

இங்கிலாந் திலிருந்தவாறே அவர் இந்தியப்படங்களுக்கு இசையமைக்கவுள்ளார்.

நல்லூர் பொது நூலகம்
யாழ்ப்பாணம்

சமாதானத்தின் கதவுகள் அகலத்திறக்கட்டும்

அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே!...

தொடரும் யுத்தத்தை நிறுத்தி, சமாதானத்தையும் அமைதியையும் நாம் நடைமுறையில் அனுபவிப்பதற்கான சந்தர்ப்பமொன்று இப்போது மீண்டும் எமக்குக் கிடைத்திருக்கின்றது. கடந்த காலங்களில் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் நம்மவர்கள் சரிவரப்பயன்படுத்தத் தவறிவிட்டார்கள். அதன் விளைவுகளால் அழிவுகளையும்அவஸ்த்தைகளையும் மட்டும்தான் நாம் இன்றுவரை சந்தித்திருக்கின்றோம். கடந்தகாலத் தவறுகளை கண்டறிந்து கற்றுக் கொள்ளா விட்டால் சமாதானத்திற்குப் பதிலாக சுடுகாட்டைத்தான் நாம் காண முடியும் என்பதை நாம் உணர வேண்டும்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்பினருமாகிய அரசும், புலிகளும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கே வரவேண்டும். மக்களாகிய உங்களோடு இணைந்து எமது கட்சியும் இதை வலியுறுத்த விரும்புகின்றது. ஏனெனில் கடந்த காலப் பேச்சுவார்த்தைகளின் போது விதிக்கப்பட்ட நிபந்தனைகள் தான் சமாதான முயற்சிகளை முறித்துக் கொண்டன. பூநகரி முகாமை அகற்றினால் தான் பேச்சுவார்த்தை என்று புலிகள் நிபந்தனை விதித்த போது அப்பேச்சுவார்த்தை முறிவடைந்தது! அதன் பின்பு அரசபடைகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அங்கு பூநகரிக்கு நிகரான பல முகாம்களையும், சோதனைச்சாவடிகளையும் அமைத்திருக்கிறார்கள். அதேபோல் அரசும் எந்தப் பூநகரியை விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று அடம் பிடித்ததோ அதே பூநகரியைப் புலிகளிடம் இழந்திருக்கின்றது. மொத்தத்தில் இரு தரப்பினரும் ஒரு குறுகிய பார்வைக்குள் தம்மைச் சுருக்கிக் கொண்டு தமது அரசியல், இராணுவ நலன்களையே முன்னிலைப்படுத்தியிருக்கிறார்கள்.

சமாதானம் என்பது விட்டுக்கொடுத்தல், உறுதியாயிருத்தல் ஆகிய இரண்டு வழிமுறைகளுக்கூடாகத்தான் உருவாக முடியுமென நானும் எனது கட்சியும் நம்புகிறோம். அனுபவங்களிலிருந்துதான் போதனைகள் பிறக்கின்றன. விட்டுக்கொடுத்தல் என்பது சரணாகதியடைவதென்பதல்ல. அர்த்தம். மாறாக, பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்ற இரு தரப்பினருக்குமிடையிலான நல்லெண்ணங்களை பரஸ்பரம் புரிந்து கொள்வதற்கே அது உதவுகின்றது. எந்த விடயத்தில் விட்டுக் கொடுத்துப் போவது. எந்த விடயத்தில் உறுதியாயிருப்பது என்பதில் தமிழ் பேசும் தரப்பினர் தெளிவாக இருந்தால் போதுமானது அழிவுகளிலிருந்து மக்களாகிய உங்களைப் பாதுகாக்க வேண்டுமேயானால் இது போன்ற முடிவுகள்தான் தேவைப்படும் என்பதை நாம் உணர வேண்டும்.

இயல்பு வாழ்க்கை திரும்பினாலே பேசமுடியும் என்று புலிகள் இப்போது நிபந்தனை விதித்துள்ளார்கள். யுத்தம் தொடர்கின்ற வரைக்கும், மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் தாக்குதல்கள் நடக்கின்ற வரைக்கும் இயல்பு வாழ்க்கையென்பது சாத்தியமற்றதொன்றே. ஆகவே முதலில் தேவைப்படுவது ஒரு யுத்த நிறுத்தம். அதுவே பேச்சுவார்த்தைக்கான அடித்தளமாகவும் அமையும். பேச்சுவார்த்தையின் போது சமாதான முயற்சிகளை முறித்துவிடக் கூடியதான கோரிக்கைகளைத் தவிர்ப்பதும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைப்பதுமே முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். ஏனெனில், இறுதித் தீர்வை எட்டும்வரை இருதரப்பினர் மத்தியிலும் நம்பிக்கையீனங்களும், சந்தேகங்களுமே மேலோங்கி நிற்கும். இந்நிலையில் படைகளை விலக்கிக் கொள்ளுமாறும். முகாம்களை அகற்றிக் கொள்ளுமாறும் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகள் மீண்டும் யுத்த சூழலையே தோற்றுவிக்கும். ஒரு நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தற்காலிகமாகத் தாங்கிக் கொள்வதற்கும் நாம் தயாராகவே இருக்க வேண்டுமெனவும் நம்புகின்றேன். பேச்சுவார்த்தை நீண்ட காலத்திற்கு இழுபட்டுச் செல்வதையும் தவிர்க்கவேண்டும் என்பது வலியுறுத்தப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

மறுபுறத்தில், ஆயுதங்களைக்கைவிட்டு வந்தால் மட்டுமே பேசமுடியும் என்று புலிகள் மீது நிபந்தனை விதித்து,வழமையான பல்லவியை அரசுபாட முற்படுமேயானால் அதுவும் சமாதான முயற்சிக்குக் குறுக்கே எழுப்பப்படுகின்ற ஒரு தடைச் சுவராகவே இருக்க முடியும். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம்தான் நாமும். ஆயுதப் போராட்டத்தை இடைநிறுத்திக் கொண்டவர்கள். ஆனால் அந்த ஒப்பந்தம் செயலிழக்கச் செய்யப்பட்ட பின்பு புலிகளால் நிராகரிக்கப்படுகின்ற போராட்டத்தின் இன்னொரு பரிமாணமான ஜனநாயக வழிமுறைக்குள் நின்று நாம் போராடியும்,வாதாடியும் வருகிறோம். ஏனெனில் போராட்டத்தில் பல பரிமாணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் ஆயுத அழுத்தம். ஆனால் புலிகளை பொறுத்தவரையில் ஒரு போராட்டத்தில் இருக்கக்கூடிய பல்வேறு பரிமாணங்களில் ஆயுத அழுத்தத்தை மட்டுமே நம்பியிருக்கின்றனர். ஆகவே நிபந்தனையற்ற பேச்சிற்கு புலிகள் வரும் பட்சத்தில் அரசு,''ஆயுதக்களைவு'' விடயத்தில் விட்டுக் கொடுத்துப் போவதே ஆரோக்கியமானதாக இருக்கும் என்று கருதுகின்றேன். அதேவேளை புலிகள் ஆயுதப் போராட்டத்தை இடைநிறுத்தி பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

இன்னொரு நிபந்தனையும் புலிகள் விடுத்திருப்பதை நாம் அறிவோம். அது, தம்மோடு மட்டும்தான் அரசு பேசவேண்டும் என்ற நிபந்தனையே. எமது கட்சியை(ஈ.பி.டி.பி)பொறுத்தவரையில், யுத்தநிறுத்தம் சம்பந்தமான விடயத்தில் புலிகளோடு மட்டும் அரசு பேசவேண்டும் என்பது, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரோடும் அரசு பேசவேண்டும் என்பதுமே ஆயுத யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் என்ற வகையில் புலிகளும் முக்கிய தரப்பினராகவே இருக்கின்றார்கள்.அதனால் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் புலிகளோடு மட்டும் தான் யுத்தம் நிறுத்தம் தொடர்பாக அரசு பேசவேண்டும்.ஆனால் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஏனைய தரப்பினருக்கும்இருக்கின்ற பங்கினையும் அக்கறையினையும் யாரும் மறுத்துவிட முடியாது. ஒரு ஜனநாயகச்சூழலில் ஏகப்பிரதிநிதிகள் என்ற கருத்துக்கு இடமிருக்க முடியாது.உங்கள் பிரதிநிதிகள் யாரென்பதைத் தீர்மானிப்பவர்கள் மக்கள் சக்தியாகிய நீங்கள்தான். ஒரு சுயாட்சிப் பிரதேசமாக அமையப்போகின்ற 'ஈழமண்டலத்தில்' மக்களாகிய, உங்களது மாற்றுக் கருத்துக்களுக்கு இடமிருக்க வேண்டும். பலகட்சி ஜனநாயக முறை இருக்கும் இடத்திலேயே அது சாத்தியப்படும் என்பது தான் உண்மை நிலை. இக்கருத்தினை நாம் இப்போதிருந்தே வலியுத்தத் தவறினால் எதிர்காலத்தில் ஜனநாயக உரிமைகளை எம்மால் பாதுகாக்க முடியாமல் போய்விடும்.

ஏனைய சில தமிழ்க்கட்சிகள் இவ்விடயத்தில் தெரிவித்திருந்த கருத்துக்களையும் நீங்கள் அறிவீர்கள். பேச்சில் ஒன்றையும் நடைமுறையில் இன்னொன்றையும் அவர்கள் கடைப்பிடிப்பதையே உணரமுடிகிறது.புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு,தாம் ஒதுங்கிக் கொள்வதாகச் சொன்ன விடயம் உண்மையாயின் அவர்கள் அரசதரப்பினரோடு தற்போது பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது எதற்காக? தேர்தல்களில் பங்கெடுப்பதும் பதவிகளில் இருப்பதும் எதற்காக? அறிக்கைகளும் கண்டனங்களும் எதற்காக?தமது கட்சிகளை இன்றுவரை கலைத்துவிடாமல் பாதுகாப்பது எதற்காக?புலிகளோடு இணைந்துஇவர்கள் போராடவேண்டும். இன்றேல் அடையாளம் தெரியாமல் ஒதுங்கிக்கொள்ளவேண்டும்.இதில் எதைச் செய்யவும் இவர்கள் தயாராயில்லை.ஆகவே அரசியலுக்காகவே அவர்களது அறிக்கைகள் என்பதை நாம் உணரலாம்.உங்களையும் ஏமாற்றி புலிகளையும் ஏமாற்ற நினைக்கும் செயல்தான் இது.

அரசியலுக்காக மக்களல்ல, மக்களுக்காகவே அரசியல்,ஈ.பி.டிபியினராகிய நாம் என்றும் எதிலும் வெளிப்படைத் தன்மையையே விரும்புகின்றோம்.நாம் புலிகளுக்கெதிரான இரகசியப் பிரச்சாரங்களின் ஈடுபடுபவர்களல்ல படையினரோடு இணைந்து புலி பிடிக்கச் செல்பவர்களல்ல.புலி உறுப்பினர்களின்கழுத்தை வெட்டி பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுமல்ல. புலிகளுக்கென்றுசிறைக்கூடம்வைத்திருந்தவர்களுமல்ல· முரண்பாடான விடயங்களை இனங்கண்டு வெளிப்படையாகவே தெரிவிக்கும்நேர்மையான அரசியலையேஎமதுகட்சிபின்பற்றவேண்டுமென்பதே எனதுவிருப்பமாகும். கருத்துக்களை கருத்துக்களால் சந்திப்பது தான் ஆரோக்கியமான விடயமாக இருக்க முடியும்.

மக்களாகிய உங்களின் சார்பாகவும், உங்களின் சுபீட்சத்திற்காகவுமே, இன்று நாமும் அரச தரப்போடு பேசி வருகின்றோம். இதுவரைகால இழப்புகளினாலும், உழைப்புக்களினாலும் மட்டுமே இன்று நாம் உறுதியோடு அரசுடன் பேசமுடிகிறது. இந்த இழப்பிற்கும், உழைப்பிற்குமுரிய சகல தரப்பினருக்கும் எம் தேசம் என்றும் தலைவணங்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அரைகுறைத் தீர்வுகளில் கையொப்பமிடுவதற்கு நாம் தயாரில்லை. எமது சுயாட்சிக் கொள்கையில் நாம் உறுதியாயிருக்கின்றோம். ஏனைய தரப்பினரைவிட நாம் வேறுபட்ட கோரிக்கைகளையும் கொண்டிருக்கின்றோம். அதிகாரப் பகிர்வின் மூலம் வடக்கு கிழக்கிற்கு ''ஈழமண்டலத்திற்கு'' விசேட அதிகாரத்தினை நாம் கேட்கின்றோம். எமது சுயாட்சி அதிகாரத்தின் கீழுள்ள பொலிஸ்படை மட்டும் போதாது இராணுவம், வான்படை, கடற்படை ஆகியவற்றிலும் தமிழ் பேசும் பிரிவுகள் அமைக்கப்படவேண்டும்.

அம்பாறை உட்பட வடக்கு - கிழக்கு இணைந்த ஒரே அலகை தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிலப்பரப்பு ஓர் அகத்தன்னாதிக்கமுடைய அலகாக இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதி, நீதி, காணி, கல்வி, அதிகார விடயங்களிலும் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றோம். அதைவிட இலங்கை ஒரு மதசார்பற்ற நாடாக இருத்தல் வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றோம். அரசுக்கு நாம் கொடுத்திருந்த 19 பக்க அறிக்கையில் மலையக மக்கள் வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற தமிழ்பேசும் மக்கள் ஆகியோரது விடயங்களிலும் எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

நோர்வே நாட்டின் சமாதான முயற்சிகளை நான் மனந்திறந்து வரவேற்கின்றேன். அதே நேரம் அரசுக்கும் புலிகளுக்கும் நான் தெரிவிக்க விரும்புவது இதுதான். சமாதானத்தை உருவாக்க இன்றே தயாராகிவிடுங்கள் இன்றேல் நாளை இதைவிடத்தடைகள் அதிகமாகிவிடும். எதிர்காலச் சந்ததியினருக்கு மட்டுமல்ல, இன்றைய தலைமுறையினருக்கும் நாம் தேடிக் கொடுக்கவேண்டியது புதைகுழிகளையும் சிறைக்கூடங்களையுமல்ல. மாறாக சமாதான தேசத்தையே சமாதானத்திற்கான கதவுகளை அகலத்திறந்து விடுங்கள்.

நாம் விரும்புவது ஒடுக்குமுறையோடு உடன்பட்டுப் போகின்ற சமாதானத்தையல்ல. கௌரவத்துடனான உரிமையோடு வாழமுடிகின்ற சூழலையும், அதற்கான சுதந்திரத்தையுமே இதற்கான முதலாவது திறவுகோல் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களிடமே உள்ளது அதுவே யுத்த நிறுத்தம்.

என்றும்நாம் மக்களின் நண்பர்கள்
தேசத்திற்காக தியாகங்களை ஏற்போம்.

அன்புடன்

டக்ளஸ் தேவானந்தா
செயலாளர் நாயகம்
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
(ஈ. பி. டி. பி.)

(வி. இல. 257)

வலி.கிழக்குபிரதேசத்தில் தூரிதகதியில் அபிவிருத்தி முயற்சிகள் முன்னெடுப்பு

[அச்சுவேலி]

வலி-கிழக்கு பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் அபிவிருத்தி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கோப்பாய் உதயசூரியன் சனசமூக நிலையத்தின் பாவனைக்கென 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் வலி. கிழ. பிர. சபை தலைவர் பூ. குணசிங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இதே வேளையில் புத்தூர்-சுன்னாகம் வீதியில் தற்காலிகமாக இயங்கி வரும் வளர்மதி சனசமூக நிலையத்திற்கும் முன்பள்ளிக்குமான நிரந்தர கட்டடம் அமைக்கும் வேலைகள் துரித கதியில் இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு இலட்சத்து25 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் ஈ. பி. டி. பி. யின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் ரவி உட்பட பிரமுகர்க ள பலர் கலந்து கொண்டனர்.

அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியில் 25 ஆயிரம் ரூபா செலவில் சிறுவர் பூங்கா ஒன்றும் அமைக்கப் பட்டுவருவதாகத்தெரிவிக்கப் படுகிறது. (க-57)

புத்தூர் பகுதியில் 250 விவசாயிகள் விவசாயக் கடன் பெற ஏற்பாடு

[அச்சுவேலி]

புத்தூர் க்மநல சேவை நிலைய பிரிவின் கீழ் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வரும் 250 விவசாயிகளுக்கு இந்த ஆண்டுக்கான பெரும் போகப் பயிர்ச் செய்கைக்கு உதவும் வகையில் விவசாயக் கடன் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விவசாயிகளிடம் இருந்து இதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

இக் கடன் திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் விவசாயிகள் தத்தமது பகுதி விவசாய சம்மேளனங்களின் சிபார்சின் அடிப்படையில் சுயமான முறையில் விண்ணப்பங்களைத் தயாரித்து விவசாயச் சம்மேளனங்களின் ஊடாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் கடனுக்கான விண்ணப்பங்கள் விவசாயச் சம்மேளனங்களின் உதவியுடன் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கான கடன் பணம் உரிய காலத்தில் வழங்குவதற்கு ஏற்பாடாகியுள்ளது. (சி-14)

உரும்பிராயில் தென்னாசிய கலைகள் - கலாசார நிலையம்

(யாழ்ப்பாணம்)

தென்னாசியக் கலைகள் மற்றும் கலாசார நிலையம் மிக விரைவில் உரும்பிராயில் உத்தியோக பூர்வமாக இயங்கவிருக்கிறது.

இதன்பணிப்பாளராக யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர் என். யோகராஜனும் வெளிவிவகாரஇணைப்பாளராகயாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் பி.கணேசலிங்கமும் நியமிக்கப்பட்டுள்ளனர்

(சி-3)

மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ். குடா நாட்டில் மட்டுமல்ல இலங்கையின் எப் பகுதிக்குச் சென்றாலும் போர் எம்மைத் தொடர்கின்றது. அதன் தாக்கங்கள் கொடுமைச் சொற்கள் சிறுவர் போன்றோரது வாழ்வில் சோக வரலாற்றை பாதித்து நிற்கின்றது. இந்நிகழ்வுகளை 17 வருடமாக அனுப்வித்து களைத்துவிட்ட நிலையில்-சமாதானத்தின் அவசர தேவையை நாம் வேண்டி நிற்கின்றோம். போரைநிறுத்துவதற்காக எடுக்கப்படும் சகல முயற்சிகளும் எம் துன்ப வாழ்வின் ஒளி விளக்காகும்.

நாளை 25-ம் திகதி யாழ். நகரில் இடம் பெறவுள்ள சமாதானப் பேரணியில் எமது அங்கத்தவர்கள் மட்டுமன்றி பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஆர்வமுள்ள பெண்கள் பலரும் கலந்து ஆதரவு வழங்குமாறு மகளிர் அபிவிருத்தி நிலையபணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தந்தையும் தனயனும் இணைந்து ஆலயமணியைத் திருடினராம்

யாழ். நகரில் சம்பவம்

(ஈச்சமோட்டை)

கடந்த வியாழக்கிழமை யாழ். நகரிலுள்ள மீனாட்சியம்மன் ஆலயத்தில் மணியொன்றைத் திடிக்கொண்டு சென்றதாகக் கூறப்படும் தந்தையும் மகனும் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாது மேற்படி கோவில் மணியைத் திருடிக் கொண்டு இவ்விருவரும்சென்று கொண்டிருந்த சமயம் ஊரார் வழிமறித்து விசாரித்தபோது இத் திருட்டு அம்பலமானதாம்.

இதையடுத்து இம் மணி யாழ் முனியப்பர் ஆலயத்துக்கு சொந்தமானதென திருடர்கள் தெரிவித்தனர் இதனால் மணிமுனியப்பர் கோவிலில் மக்களால் ஒப்படைக்கப்பட்டது.

ஆயினும் கோவில் பூசகர் இது தமது மணி அல்லஎனத் தெரிவித்ததை அடுத்து பொலிஸாரிடம் மேற்படி சம்பவம் பற்றி முறையிடப்பட்டது. (சி-59)

கூட்டமும் நிர்வாக தெரிவும்

யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00மணிக்கு கல்லூரி பழைய மாணவர் சங்க அலுவலகத்தில் நடை பெறவுள்ளது. (செ-106)

சிறுவர் பூங்கா திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வரணி மகாவித்தியாலய சிறுவர் பூங்கா திறப்புவிழா இன்று சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார் திறப்பு விழாவினைத் தொடர்ந்து கற்பித்தல் உபகரணக் கணகாட்சியும் இடம் பெறவுள்ளது. (செ)

பாம்பினால் கடியுண்டார்

(கரணவாய்)

விஷப் பாம்பினால் கடியுண்டவர் ஆபத்தான நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இலகடி உடுப்பிட்டியைச் சேர்ந்த ஏ. தேவராசா என்பரே விஷப்பாம்பினால் கடியுண்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வராவார். (க-27)

வெட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில்

(கரணவாய்)

காணித் தகராறு காரணமாக இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் கத்தி வெட்டில் முடிவுற்றது.

இச்சம்பவத்தில் வல்வெட்டி அடைப்பு என்றும் பகுதியில் சி. நடேசன் (நடராசா)என்பவரே கழுத்திலும், கையிலும் வெட்டுக் காயங்களுக்கு உட்பட்டு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றது. (க-27)

கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்.றோக்ஸ்விளையாட்டுக்கழகம் நடாத்தும் 7வீரர்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட 10பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில்,இன்று மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு.

★ யுத்காமேல் வி.க.எதிர் ஜெற்லைனர்ஸ் வி.க-மு.ப 9.30

★ ஈச்சமோட்டை வி.க. எதிர் ஜெற்லைனர்ஸ்வி.க மு.ப.11.00

★ அருள்மாதா வி.க.எதிர் யுத்காமேல்வி.க-பி.ப.2.30

★ பெஸ்கி வி.க,எதிர் நட்சத்திர வி.க.மலை4.00

க.பொ.த. உயர்தர மதிப்பீட்டு பரீட்சைமுறையில் மாற்றமிராது

புதிய கல்விச்சீர்திருத்தத்தின் கீழ் க.பொ.த உயர்தரத்தில் கல்விபயிலும் மாணவர்களுக்கு மதிப்பீட்டுப் பரீட்சைகள் இனிமேல் நடைபெறமாட்டாது என கடந்த மாதம் யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றின் பின்னர் மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் தோன்றியிருந்த குழப்பநிலை தொடர்பாகத் தற்போது பின்வரும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இது பற்றிய உத்தியோக பூர்வ அறிவித்தல் வரும் வரை பழைய நடை முறைகளே இவ் விடயத்தில் பின் பற்றப்படுமெனத் தற்போது தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சில பாட சாலைகளில் மதிப்பீட்டுப் பரீட்சைகள் கைவிடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் இந்த ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு. இக்கணிப்பீடு தொடர்பாகத் தீவிரமாக பரிசீலனை இருக்கமாட்டதெனவும். மேலும் தெரிவிக்கப்படுகிறது. (சி-3)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்கள் சம்மேளனம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு சார்பில் நடைபெறவுள்ள சமாதான முயற்சிக்கான ஆதரவுப் பேரணிக்கு சகல சனசமூக நிலைய அங்கத்தவர்கள் உறுப்பினர்கள் ஆகியோர் இன்று 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூரில் ஒன்று கூடி பேரணியில் கலந்து எம் இனத்தின் இயல்பு வாழ்விற்கும் சுதந்திரத்திற்கும் உடனடியுத்த நிறுத்தம் மற்றும் பேச்சுக்களை தாமதமின்றி ஆரம்பித்தல் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வரவேற்றல் ஆகிய கருத்துக்களை முன்வைக்க அணிதிரளுமாறு வேண்டிக்கொள்கின்றோம். (க)

இலங்கையில் சுமார் 7 ஆயிரம் பேர் காச நோயால் பாதிப்பாம்

உலக சுகாதார நிறுவனம் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் காசநோய்த் தாக்கம் அதிகரித்து வருவதாக உலக சுகாதார தாபனம் தெரிவித்துள்ளது.

1999 ஆம் ஆண்டில் 6922 பேர் புதிதாக இந்நோய்க்கு உள்ளாகிச் சிகிச்சை பெற்றுள்ளார்கள்.

கடந்த 12 ஆண்டுகாலப் பகுதியில் சராசரியாக 6 ஆயிரம் பேரே வருடா வருடம் இந்நோய்க்கு ஆளாகிவந்தனர்.

இருப்பினும் கடந்த ஆண்டில் காசநோய்த் தொற்று இலங்கையில் அதிகரித்திருப்பதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் மதிப்பிட்டுள்ளது (க-9)

சங்காபிஷேகம்

(அரியாலை)

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை சங்காபிஷேகமும் விசேட பூஜையும் இடம் பெறவுள்ளது.

பி. ப. 4. 30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் தொடர்ந்து அம்பாள் வீதி உலா வருதலும் இடம்பெறவுள்ளது.

(செ-106)

பயிற்சி நெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் அனுசரனையுடன் கட்டைவேலி நெல்லியடி ப. நோ. சங்கம் மகளிருக்கான அடிப்படைப் பயிற்சி நெறியினை 50 மகளிர் குழு உறுப்பினரின் சமுகத்துடனும் சங்கப் பணியாளர்களின் சமுகத்துடனும் கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை மு. ப. 11. 00 மனிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பொ, கனகசபாபதியினால் மங்கள விளக்கினை ஏற்றி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் சங்கத் தலைவரினால் தலைமை உரை நிகழ்த்தப்பட்டு ஆசியுரையினை யாழ். மாவட்டக் கூட்டுறவு சபைத் தலைவர் நிகழ்த்தினார்.

தொடர்ந்து கூட்டுறவு மகளிர் குழுத் தலைவி, கூட்டுறவுச்சபைமகளிர் மேபாட்டு உத்தியோகத்தர் பயிற்சி அளிப்பு ஆசிரியை உட்பட பலரின் உரைகளும் இடம் பெற்றன. (க)

இன்று கட்டடத் திறப்புவிழா

(நெடுந்தீவு)

நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயத்தின் செயற்பாட்டுக் கூட திறப்பு விழா இன்று 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு இடம்பெறவுள்ளது.

முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளும் தீவகக்கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் மேற்படி கட்டடத்தை திறந்து வைப்பார்.

வித்தியாலய அதிபர் த. இலங்கைநாதன் தலைமையில் நடைபெறும் திறப்பு விழாவிற்கு தீவகத் தெற்கு பிரதேச செயலர் செ. இரத்தினம், வேலணை பிரதேசச் சபைத்தலைவர் ந. கருணாகரமூர்த்தி ஆகிய பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொள்வர். (க-82)

விளையாட்டுப் போட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக் கிழமையும், காலை 8. 30 மணிக்கு, ஊர்காவற்றுறை புனித அந்தோயார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத் தலைவர் ஞா. செந்தமிழ் செல்வன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு ஊர்காற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் எஸ். மதனரர்ஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (செ-75)

இடனில் பருவத்தும் ஒப்புர விற்கு ஒல்கார் கடனறி காட்சி யவர்.

- குறள்

வலம்புரி

கடமையில்லாத உரிமை

இன்றைக்கு உரிமை கோரி நிற்கின்ற இனங்களுக்கு மலர்வு கிட்ட வேண்டுமானால் கடமையைச் சரிவரச் செய்தாக வேண்டும். உரிமைக்கு உயிரைக் கொடுப்பவர்கள் இருக்கிறார்கள். எல்லோருமல்லர். பூரண நிலையொன்று பரிணமிக்காததினால் தான் உரிமைப் போராட்டங்கள் வெற்றியளிக்காதிருக்கின்றன.

கொள்கையில்லாத அரசியல், உழைப்பு இல்லாத செல்வம், அறம் இல்லாத வாணிபம், ஒழுக்கம் இலாத கல்வி மனச்சாட்சி இல்லாத இன்பம், மனத்தன்மை இல்லாத விஞ்ஞானம், தியாகம் இல்லாத வழிபாடு என்பன சமூக எழுச்சிக்கு குந்தகமாகவிருப்பன என்பது காந்தியடிகளின் உரையாத நம்பிக்கை அவரது கருத்துக்களை அப்படியே ஒப்புக் கொண்டு நிற்கும் வேளையில் இன்னொன்றையும் உறைக்க அறைகின்றார். நன்மைகள் எதனையும் எட்ட முடியாத சமூகம் கடமைகள் இலாது உரிமைகள் கோரித்தான் சீரழிகின்றன என்பது அகிம்சை வாதியின் வாதம்.

கடமைகள் இல்லாத உரிமைகள் யாருக்குப் பொருந்தும் என்று நாம் சிந்திக்க வேண்டும். அரசியல் அல்லது அரசியல் அடிவருடிகளாக அலைபவர்களுக்குத்தான் என்பது துலாம்பரமானது. அரசியல் என்ற கயத்தில் சுயநலம் என்ற நஞ்சு பாய்ச்சப்பட்ட ஒரே காரணத்தால் தான் இந்த அவலங்கள். கலந்து விட்ட ஆலத்தை அள்ளிப்பருக ஆடந் திருமகன் கூத்தப் பெருமான் தோன்ற வேண்டும் போலிருக்கிறது.

நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே என்பது புண்பட்ட கூற்று. மதம் மொழி இடம் போன்ற வேறுபாடுகளைக் கடந்து சகோதரத்துவத்தையும், இணக்கத்தையும்வளர்க்க வேண்டும். மகளிரின் கண்ணியத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் பழக்க வழக்கங்களைக் கைவிட வேண்டும்.

பன்முகத்தன்மையுள்ள கலாச்சாரப் பின்னணிய வளர்த்தல், வளமான பாரம் பரியத்தைப் பேணல், அறிவியல் மனப் போக்கு, மனித நேயம் சீர்திருத்தங்களில் ஆர்வம் என்பன எம் ஆராத கடமைகளாதல் வேண்டும்.

- அன்புடன் ஆசிரியர்

தீயவழியில் இளஞ்சந்ததி திசைமாறி தீய்ந்திடாது தடுக்கப்பட வேண்டும்

ஆன்மிகபலமே துணைஎன்கிறார் மாவை ஆதினகர்த்தா

(யாழ்ப்பாணம்)

,'ஆன்மிக வாழ்வுஎன்பது மகத்துவம்மிக்கது இதயத்திற்கு இதம் சேர்ப்பது இன்றைய சூழ்நிலை இந்துக்கள் என்று சொல்லிப் பழம் பெருமை பேசுகின்ற எமக்கெல்லாம் மாசு ஏற்படுத்துவதாகப் பல வழிகளிலும் அமைந்துள்ளது என்னவோ கசப்பான உண்மைதான். பெரியோரை பெற்றோரை மதிக்கின்ற பண்பு இளஞ்சந்ததியினரிடையே அருகிவருகின்ற இழிநிலை காண்கின்றோம் பாரம்பரியம் மிக்க எமது தமிழ்ச்சமுதாயத்தின் மாண்புக்கு விளைவிக்கும், மாறாதவடுவைத்தோறுவிக்கும் இப்போக்குமாறி, நற்சமுதாயம் வளர்ந்திட விழிப்புணர்ச்சி இன்றியமையாதது,''

இவ்வாறு மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் மேற்படி கோயிலில் அண்மையில் நிகழ்ந்த சமயநிகழ்வு ஒன்றின்போது திரண்டிருந்த அடியார்கள் மத்தியில் பேசுகையில் வலியுறுத்தினார்.

அவர்தொடர்ந்து அங்கு தன் உள்ளக்கிடக்கையை உரைக்கையில் ஆசாரசீலர்களாக வாழ மனதில் தூய்மையான, இறைநேயமிக்க எண்ணங்கள் மலர்ந்து வலுப்பெற வேண்டும், இன்றைய காலகட்டத்தில் இளஞ்சந்ததியினர் திசைமாறி, நெறி பிறழ்ந்து போவதற்கு நெஞ்சத்தைப் பாழ்படுத்தும் வகையிலான வக்கிர நோக்கம் கொண்ட, பணவசூலையே அடிப்படையாகக் கொண்ட சினிமாக்களும் முக்கிய காரணமே எனலாம் புராண காலமாட்சிமையைத் துல்லியமாக வெளிப்படுத்தும் வகையிலானவை எனக் கூறப்படும் தொலைக்காட்சித்தொடர் நாடகங்களிலும் முழுமையைக் காண முடிவதில்லை கருப்பொருளே சிதைக்கப்படுகிறது.

இந்தவகையில் சீரியகருத்துகளைச் செப்பும் நூல்களையும் படிக்க இளஞ்சந்ததியினர் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆன்றோர் வரலாறு முன்னுதாரணமாக அவர்களால் கொள்ளப்பட வேண்டும். ஆழ்ந்த, தெளிந்து உணரும் வகையிலான பக்திநெறி புகட்டப்பட வேண்டும்'' என்றார்.

மலேசிய வேலைவாய்ப்பு: இலங்கை பெண்களுக்குக் கூடுதல் அனுகூலம்

(தொடர்ச்சி)

அடுத்த மாதத்தில் இருந்து இலங்கைப் பெண்கள் மலேசியாவில் வீட்டுப்பணிப்பெண்களாகக் கடமையாற்றும் அனுமதிகவாய்ப்பினைப் பெற்றுக் கொள்வார்கள் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது

வீட்டுப்பணிப்பெண்களாக இலங்கைப் பெண்களை மலேசியாவில் பணிசெய்ய அனுமதிப்பது தொடர்பாக வெளிநாட்டுத் தொழிலாளருக்கான அமைச்சரவைக்குழு மேற்கொண்டிருந்த பரிந்துரைகளுக்கமைவாக மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மலேசியச் சட்டப்படி, முன்னர் 10 ஆயிரம் டொலர் களை மாதாந்த குடும்ப வருமானமாகப் பெற்றுக்கொள்பவர்களும், அதற்கு மேல் வருமானம் பெறுபவர்களுமே வீட்டுப் பணிப்பெண்கள் வைத்திருக்க முடியும்.

இதனால் முக்கிய பிரமுகர்கள் மாத்திரமே பெண்களை வேலைக்கமர்த்தியிருந்தனர்.

தற்போது 5ஆயிரம் டொலர்களை குடும்ப வருமானமாகப் பெறுபவர்களும் வேலைக்குப் பெண்களை அமர்த்த முடியும் எனும் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்காரணமாக இலங்கையைச் சேர்ந்த பணிப் பெண்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. (சி-9)

கோப்பாய் பிரிவில் 12 சமூர்த்தி உத்தியோகத்தர்க்கு நிரந்தர நியமனம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் கடந்த ஆண்டின் பிற்பகுதியில் முதல் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி வந்த 12 பேருக்கு சமூர்த்தி அதிகார சபையினால் இந்த மாதத்திலிருந்து நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நிரந்தர நியமனம் பெற்றோரில் ப. பத்மநாதன் (வாதரவத்தை) ச. மங்களேஸ்வரி (கோப்பாய்), ப. கீதாஞ்சலி (அச்சுவேலி), திருமதி இ. விஜயகுலமணி (அச்சுவேலி), திருமதி க. கல்பனா (சிறுப்பிட்டி), எஸ். பிரேமதாஸ் (அச்சுவேலி), ரி. கேதீசன் (அச்செழு), எஸ். கர்ணன்(உரும்பிராய்), எம். சந்திரசேகரம் (வலலாய்), எஸ். ஞானசம்பந்தன் (புத்தூர்), உ. பகீரதன் (பத்தமேனி), செ. காந்தரூபி (உரும்பிராய்)ஆகியோர் அடங்குவர்.

இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் கடந்த வியாழக்கிழமை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் வழங்கப்பட்டது. (14-சி)

விதிமுறைக்கேற்பவே நியமனங்கள்: இதுவே எமது நிலைப்பாடாகும்

பல்கலை ஊழியர் சங்கம் விளக்கம்

[யாழ்ப்பாணம்] --

எக்காலகட்டத்திலும் பாதுகாப்பு ஊழியர்களை நிரந்தரமாக்கக்கூடாது என நாம் தெரிவிக்கவில்லை அதற்கு நாம் எதிரானவர்களுமல்ல. ஆனால் விதிமுறைக்கு உட்பட்ட நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

மேற்கண்டவாறுபல்கலைக் கழக ஊழியர் சங்கம் தமிழ்பத்திரிகை ஒன்று கடந்த 23 ஆம் திகதி செய்தி வெளியிட்டமை தொடர்பாக கருத்து வெளியிடுகையில் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு வருடத்திற்கு முன் நியமனம் செய்யப்பட்ட 14 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கம் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்துமேற்படி 14 பேரையும் பதவியிலிருந்து நீக்க முடிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்டோர்உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்ததும் பின் உயர் மட்ட தலையீட்டினால் அம்முயற்சி நிறுத்தப்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே. (க)

மின்சாரம் வழங்கல்

(மந்திகை)

வடமராட்சிப் பிரதேசத்தில் இதுவரை இருபத்தி நான்கு மணித்தியால மின்சாரம் வழங்கப்படாத இடங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வரும் மின் விநியோகத்தின் அடுத்த கட்டமாக துன்னாலை, தாமரைக்குளத்தடி, வெலக்கந்தோட்டம், குடவத்தை, கலிகை, யாக்கரு, கிழவித்தோட்டம் ஆகிய இடங்களுக்கு அடுத்த மாத முற்பகுதியில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலகடி, அத்தாய், தாமன் தோட்டம், தம்பசிட்டி ஆகிய இடங்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டமை தெரிந்ததே. (க-28)

அச்சுவேலி தெற்குவீதிகள் சீர்கேடு பிரதேச சபையிடம் முறையீடு

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்குப்பகுதியில் அமைந்துள்ள மிகவும் மோசமான நிலையில் உள்ள முழுக்கன் இந்துமயான வீதி மற்றும் பயிற்றோலை-நாவலம்பதி வீதி ஆகிய இருமுக்கிய வீதிகளையும் உடனடியாகத் திருத்தியமைக்குமாறு கோரி அச்சுவேலி கலாநிதிமூகநிலையத்தினால் வலிகிழக்கு பிரதேச சபைத் தலைவருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்விரு முக்கியமான வீதிகளும் சுமார் 20 வருடகாலங்களாகப் புனரமைப்பு வேலைகள் எதற்கும் உட்படுத்தப்படாது உள்ளமையினால் இவ்வீதியால் செல்லும் பாதசாரிகள் மற்றும் வாகனங்கள் பெரும் இடைஞ்சல்களுக்கு மத்தியிலேயே செல்ல வேண்டியுள்ளது.

மேலும் முழுக்கன் இந்துமயானத்திற்குரிய வீதி கடந்த 95 ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவ நடவடிக்கையினால் இறுதிஊர்வலம் செல்ல முடியாத நிலைக்கு சேதமாகியிருப்பதால் பிரேதப் பேழைகளை தோள்களிலேயே மக்கள் சுமந்துசெல்ல வேண்டியுள்ளது. குறிப்பாக மழைகாலங்களில் இப்பகுதியில் மழைநீர் தேங்கி சதுப்புத் தன்மை அடைவதால் மக்கள் மேலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். (14-சி)

பரிசளிப்பு விழா

(மந்திகை)

யாழ்.சைவபரிபாலன சபையினரால் கடந்த வருடம், அகில இலங்கை ரீதியில் நடாத்திய சைவசமயத் தேர்வில் சித்தியடைந்தவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை, நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலன சபை உதலைவர் சைவப்புலவர் வ.கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு தீவக வலயக்கல்விப்பணிப் பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார். (செ-23)

தவக்கால சிந்தனை

18 ஆம் நாள்

யூதர்கள் என்னை ஒருமுறை சிலுவையில் அறைந்தார்கள் யூதாஸ் என்னை முத்தமிட்டு ஒருமுறை காட்டிக் கொடுத்தான். நீங்களோ என்னை நிதமும் தீர்ப்பிட்டுக் காட்டிக்கொடுக்கிறீர்கள் என இத்தவக்காலத்தில் இயேசு எமக்கு கூறுகின்றார்.

காட்டிக் கொடுப்புக்களும், கைதுகளும் நிறைந்த இன்றைய காலகட்டத்தில் எமது கிறிஸ்தவ விழுமியங்கள் படுகொலை செய்யப்படுகின்றன. குடும்பங்களுக்கிடையே பிரிவினைகள் கணவன், மனைவி இடையே புரிந்துணர்வின்மை பெற்றோர், பிள்ளைகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் என பிரச்சினைகள் பரந்து விரிந்து எமது வாழ்வியலை சின்னாபின்னப் படுத்திக் கொண்டிருக்கிறது. இந்நேரத்தில் இயேசு என்ன கூறுகிறார் சிந்திப்போம்.

தவக்காலம் மனமாற்றத்தின் காலம் அதை-மனித ஒன்றிப்பின் காலம். இக்காலத்தில் எம்மிடையே இருக்கும் முரண்பாடுகளையும் தான்தோன்றித்தனமான போக்குகளையும் விடுத்து அன்பு உள்ளம் கொண்டவர்களாக எமது நாளாந்த வாழ்வின் செயற்பாடுகளினூடாக வாழ்ந்து காட்டமுயற்சிப்போம்.

கௌரி
அச்சுவேலி

திருமலையில் 2வது நாளாக தொடரும் இரவும்பகலும் உண்ணாவிரதப்போர்

(வவுனியா)

திருமலை மாவட்டதொண்டராசிரியர்களை நிரந்தரமாக்கக் கோரி வடக்குக் கிழக்கு மாகாண சபை அலுலகத்தின் முன்னால் நேற்று முன்தினம் தொடக்கம் மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

நேற்று முன்தினம் மறியல் போராட்டமாக ஆரம்பமான இப்போராட்டம் நேற்று சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டமாகியது.

இரவு முழுவதும் குறிப்பிட்டளவு ஆண் தொண்டராசிரியர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

நேற்று உண்ணாவிரதமிருந்த பரமேஸ்வரி (வயது 25) என்ற ஆசிரியை மயக்கமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார், தொடர்ந்து நடைபெறும் இவ் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக இன்று முதல் பாடசாலை மாணவர்களும் போராட்டங்களில் குதிக்கலாம் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன,

உயர் கல்வியமைச்சிலிருந்து தமக்கு ஒரு உறுதியான பதில் வரும் வரை தமது போராட்டம் தொடரும் என ஆசிரியர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்,

இது தொடர்பாக ஏற்கெனவே வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில் உள்ளது.

(வ-ச)

இன்று--

உதாசீனப்படுத்தக்கூடாது என்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ளது.

17ஆண்டு காலப் போரினால் தமிழ்மக்கள் சொல்லொணாத் துன்பதுயரங்களினால் பீடிக்கப்பட்டு வாழ வழியிழந்து சொந்த மண்ணிலேயே ஏதிலிகளாக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலை தொடராமலும் பொருளாதாரத் தடையினால் எம் உடன்பிறப்புசள் வன்னியில் பட்டினிச்சாவை எதிர்நோக்கி இருப்பதை நீண்டு செல்லவிடாது தடுப்பதற்குமான எழுச்சிப்பேரணியாக இப்பேரணி அமையவுள்ளது,

இச் சமாதானப் பேரணி நல்லூர்க்கந்தன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி கோயில் வீதியூடாக பிரதான வீதியில் திரும்பி பிரதான வீதியூடாகச் சென்று துரையப்பா விளையாட்டரங்கை அடையும். அங்கு பொதுக் கூட்டம் நடைபெறும். (வ-ச)

சகிகை---

மேல் உராசி மோதியதினால் வீட்டில் இருந்த ஒரு வயோதிபர் ஒருவர் காயமெதுவுமின்றித் தப்பிய போதும், ஒரு பச்சிளம் பாலகன் பலியாகியதுடன் மற்றும் மூவரும் படுகாயமடைந்தனர்

இந்த விமான விபத்தின் போது 11 வீடுகள் சேதமுற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்குள்ளான விமானத்திலிருந்து கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இல்விபத்துத் தொடர்பாக விசாரணைகள் நடை பெறுவதாககொழும்புப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தயா ஜெயசுந்தரா தெரிவித்துள்ளார். (வ)

நாடு கடத்தப்படுவோரின் கடவுச் சீட்டுகள் பறிமுதலாகும்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்படும் இலங்கையர்களின் கடவுச் சீட்டுக்களை குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் பறிமுதல் செய்து சி.ஐ.டி. பொலிசாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற பணிப்பு கட்டுநாயக்கா விமான நிலைய குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஜேர்மனியில் இருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட 20 இலங்கையர்களின் கடவுச் சீட்டுகளும் மேற்படி அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது குறித்து இ.தொ.கா. எம்.பி. ஆர். யோகராஜன் வினவியபோது இப் புதியபணிப்புப் பற்றி அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து எவர் திருப்பி அனுப்பப்பட்டாலும் அவர்களது கடவுச் சீட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு சி.ஐ.டி. பொலிசாரிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று இப் பணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

கொழும்பு---

திலகா முன்னிலையில் மேற்படி வழக்கு தொடர்பான விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிபதி வழக்கை ஒத்திவைத்தார்.

குண்டு வெடிப்பு தொடர்பான இரசாயன பகுப்பாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையினாலேயே வழக்கு ஒத்தி வைக்கப்பட்டதுஇவ் வழக்குத் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கையை சி. ஐ. டியினர் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.(வ)

காணாமல்---

ஒன்றை வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த பிரிட்டிஷ் தூதுவர் லின்டா ஜோய் டபீல்டிடம் சமர்ப்பித்துள்ளது.

மறியல் போராட்டம் செய்திருந்தோம். அதன் போது அரசிற்கு சமர்ப்பித்த மகஜரைத் தங்களுக்கும் அனுப்பி வைக்கின்றோம் எனவும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

சைக்கிள் திருட்டு

கணக்கர் சந்தியில் நடைபெற்ற மரண வீட்டில் விட்டிருந்த லுமாலா சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

30, சுவாமியார் வீதியைச் சேர்ந்த சிறிதரன் என்பவரின் சைக்கிளே திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரு தபாலதிபர்--

பிள்ளை ஆகிய இருவருமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர். ஏனைய இரு தபாலக ஊழியர்களான ரவீந்திரன், திருநாவுக்கரசு ஆகியோர் தொடர்ந்தும் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுத்தலைமையகத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை பிரதம தபாலதிபர் கணபதிப்பிள்ளையையும் வேறு இரு ஊழியரையும் எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை கொழும்புக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (வ-ச)

இலங்கை--

பெற்றுள்ளனர். இவர்களின் அணிவகுப்பினை விமானப் படை அதிகாரி எயர் வைஸ் மார்ஷல் பெர்னான்டோ ஏற்றுக்கொண்டார்.

இவ் வணியினர் மிகவும் உறுதியுடன்சண்டைகளில் ஈடுபடுவர் என்றும் அதற் கேற்ப தமது பயிற்சிகளை முடித்துள்ளனர் என்றும் தெரிவித்த பெர்னான்டோ பெற்றோர் தமது பிள்ளைகளைப் படையில் சேர்க்க முன்வர வேண்டும் என்று தெரிவித்தார்.

(வ-ச)

பேரணியில்--

ளனர்

இதே வேளை தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளில் இருந்து ஊர் வலத்தில் கலந்து கொள்ள விருக்கும் மக்களும் அந்தந்தப் பகுதியில் இருந்து ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்களுக்கு வசதியாக அந்தந்தப் பகுதியில் இருந்து இ.போ.ச., மினி பஸ் வண்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (வ)

தமிழ் மக்கள் படும் கஷ்டங்களை பிரி. அரசிடம் எடுத்துக் கூறுவேன்

திறப்புவிழாவில் லின்டாஜோய்டபீல்ட்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் சமாதானத்தையே விரும்புகிறார்கள் சமாதானம் எப்போவரும் என்றும் மக்கள் காத்திருக்கிறார்கள்,

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புதியகூடைப்பந்தாட்ட மைதானத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்துப் பேசிய பிரிட்டிஷ் தூதுவர் லின்டா ஜோய் டபீல்ட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கல்லூரி அதிபர் அ. சிறிக்குமரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரிட்டிஷ் தூதுவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

கடந்த நான்கு நாட்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல்வேறு இடங்களுக்குச் சென்று அங்குள்ள தமிழ் மக்களின் நெஞ்சங்களை நன்கு அறிந்துள்ளேன்.

யாழ்ப்பாணத்தில்நான் தங்கியிருந்த காலத்தில் உங்களிடம் இருந்து அறிந்த உங்கள் பிரச்சினைகள் சம்பந்தமாக அரசுக்கு எடுத்துக் கூறுவேன்

யாழ்ப்பாணம் வந்தது இதுதான் முதற்தடவையாக இருந்தாலும் உங்கள் மனங்களைப்பற்றி நன்கு புரிந்துள்ளேன் என்று கூறினார்.

(வ)

விஞ்ஞானபீட மாணவன் மரணம் பல்கலையில் அனுதாபம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவனான கோபாலசிங்கம் கணேசுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்றையதினம் பல் கலைக்கழகத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

கறுப்புக் கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்ததுடன் மாணவர்களும் கறுப்புப் பட்டி அணிந்து தமது கடமைகளை மேற் கொண்டனர்.(சி-3)

அம்பாறை 13ஆம் கொலனியில் ஏழு விவசாயிகள் கைதாகினர்!

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் மரியாய் கட்டு 13ஆம் கொலனியைச்சேர்ந்த 7விவசாயிகள் விசேட அதிரடிப்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி விவசாயிகள் வயல் வேலைக்குச் சென்ற போதே கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கைது தொடர்பாக மட்டக்களப்பு எம்.பி ஜோசப் பரராஜசிங்கத்திடம் மக்கள் முறையிட்டதை அடுத்து அவர் பொலிசாரிடம் தொடர்பு கொண்டதன்பின்னரே அவ் ஏழுபேரும் இராணுவத்தினரிடமிருந்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் இவ்ஏழுபேரும் கைது செய்யப்பட்டமை தெரியவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கேஸ்பதி மோகனசுந்தரம் வேல்முருகு பிள்ளைநாயகம் சந்திரசேகரம் ரவிச்சந்திரன் செல்லையா கிருஸ்ணபிள்ளை வரகமுத்து இராசரெத்தினம் கதிர்காமர் இரத்தினசிங்கம் கிருஸ்ணபிள்ளை சிவநேசன் ஆகியோரே கைது செய்யப்பட்டார்களாவார்.

(வ-ச)

குமார்---

திருப்திஇல்லை என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், சட்டத்தரணியுமான அ.விநாயகமூர்த்தி சட்டமா அதிபர் கே. சி.கமலசபேசனுக்குக் கடிதம் மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்காவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் குமார் பொன்னம்பலம் கொலை தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ளார்.

(வ)

அண்ணனை--

நடந்த மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, அண்ணனுக்கு பக்கத்து வீட்டுக் காரர் வெட்டுவதற்காகவருவதைக்கண்டதங்கை அண்ணனைப்பிடிக்க முயன்ற போது தலையில் வெட்டு விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் குருநகர் இராசசிங்கம் வீதியில் வசிக்கும் அ. சோபா (வயது 13) என்பவரே படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவர்.

(வ-ச 105)

பேரவை உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நேற்று நடைபெற்ற தேர்தலில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் தர்மரெட்ணமும் கலைப் பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ்.கே சிற்றம்பலமும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

மேற்படி பேரவை உறுப்பினர் தெரிவிற்கு நான்கு பேர் போட்டியிட்டமை குறிப்பிடத் தக்கது. (வ-7)

கிளிநொச்சியில்--

கிளிநொச்சி நகரிலிருந்து 700மீற்றர் தொலைவில் முன்னர் இராணுவ காவலரண் இருந்த பகுதியிலேயே இம் மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டதாகவும் இவை அனைத்தும் அக்கராயன் மருத்துவ மனையில் வைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ-ச)

கண்ணீர்க் காணிக்கை

நயினாதீவைச் சேர்ந்த

செல்வன்

வாமதாஷன் சங்கரதாஷன்

(யாழ். மத்தியகல்லூரி 10 ஆம் ஆண்டுமாணவன்)

23 - 03 - 2000 அன்று அகால மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடையும் வேளையில் அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக். காணிக்கையாக்குவதுடன் அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

G.S.B. தொலைத் தொடர்பு நிலையம்

தொலைபேசி 021-3220
தொலைநகல் 021-3430

444/2 நாவலர்வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-142)

ஸ்ரீ செல்வா

யாழ். ஸ்ரான்லி வீதி,
காலை 10-30 பி.ப 2.30

பார்த்திபன்

நடித்த

சாக்கைச் சிறகினிலே

குடும்பச் சித்திரம்
நேரடி CD
(புதிய வெளியீடு)
(00115)

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.